1980 ஜூலை 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 'மெச்சூரிட்டி ஆஃப் ஏஜ் அண்ட் எக்ஸ்பீரியன்ஸ்' என்று சொன்னால் அறிவு முதிர்ச்சி அடைவது என்று பொருள். அது 6ஆவது வயதிலிருந்து ஆரம்பமாகிறது. தற்போது சொத்துரிமைக்குக்கூட சட்டத்தின் அடிப்படையிலே 18 வயது என்று வைத்திருக்கிறோம். 18 வயதில் 'மெச்சூரிட்டி' அடைந்து விடுகிறார்கள் என்பதால் தான் 18 வயதிலேயே சொத்துரிமைக்கு இந்தச் சட்டத்தில் இடமிருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் வாக்காளர்களுக்கு ஏன் 18 வயது என்று வைத்துக்கொள்ளக்கூடாது என்பதை வருகின்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவர்கள் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையில் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

உரிமைப் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை.

பேரவையின் 246 வது விதியின் கீழ், திரு. ரகுமான்கான் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இது பத்திரிகையின் மீது உள்ளதால், அப்பத்திரிக்கைக்கு எழுதிக் கேட்டு விளக்கம் பெற்றபின் பேரவையில் எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

நோட்டுப் புத்தகக் காகிதம் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை பேப்பர் மற்றும் போர்டு கன்வெர்ட்டர்ஸ் அசோசியேஷன் மத்திய அரசிடமிருந்து 1800 டன் காகிதத்தை மலிவு விலையில் பெற்று 900 டன் காகிதத்தை மட்டுமே நோட்டுப் புத்தகமாக தயாரித்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திற்கு வழங்கிவிட்டு மீதி 900 டன் விதிகளுக்கு புறம்பாக அதிக விலைக்கு வெளி மார்க்கெட்டில் விற்றதனால் ஏற்பட்டுள்ள பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை

[பேரவைத் தலைவர்] [1980 ஜூலை 7

ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே கழிந்த மாதம் 28-ந் தேதி தமிழகத்தில் இருக்கிற பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் கிடைக்காததைப் பற்றி ஒரு குறுகிய கால வினா கேட்டிருந்தேன். அன்றைய தினம் இந்த மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நோட்டுப் புத்தகங்கள் கிடைக்காதது பற்றி தங்களுடைய கவலையை எடுத்துரைத்தார்கள். நாடாளுமன்றத்திலேயும் நோட்டுப் புத்தகங்கள் பற்றாக்குறை பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டதை இந்த மாமன்றம் அறியும். மத்திய அரசிடமிருந்து இந்த அசோசியேஷன் 1,800 டன் மலிவு விலை காகிதத்தைப் பெற்று, தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திற்கு 900 டன் காகிதத்தை மட்டுமே நோட்டுப் புத்தகமாக வழங்கியிருக்கிறது. மீதி 900 டன் காகிதத்தை வெளி மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்றதால் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாக லாபம் அடைந்துள்ள செய்தி பத்திரிகைகளில் வந்திருக்கிறது. ஆகவே, தமிழ் நாட்டை எதிர்நோக்கியிருக்கிற பிரச்சனை மாணவர்கள் அதிக விலை கொடுத்து நோட்டுப் புத்தகங்களை வாங்க வேண்டியிருக்கிறது. இந்த அசோசியேஷன் சட்டவிரோதமாக இப்படி நடந்திருப்பது முக்கியமான பொதுப்பிரச்சினையாக இருப்பதால் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, சென்ற ஆண்டுக்கு முன் வரைக்கும் இந்த மலிவு விலை காகிதத்தை நோட்டுப் புத்தகங்களாகத் தயாரித்து தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திற்கு வழங்கும் பொறுப்பை இந்த 'பேப்பர் மற்றும் போர்டு கன்வெர்ட்டர்ஸ் அசோசியேஷன்' தான் வைத்திருந்தது. அவர்கள் அந்தப் பொறுப்பை வைத்துக் கொண்டு சரிவர நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டு வந்திருந்த காரணத்தால் இனிமேல் அந்தப் பொறுப்பை அவர்களுக்கு விடக்கூடாது என்று இந்த அரசு, இதற்கு முன்னால் நாங்கள் பதவியில் இருந்தபோது, அந்தப் பொறுப்பை தமிழ்நாடு பாட நூல் நிறுவனமே எடுத்துக் கொள்ளும் என்று சொல்லி, எடுத்துக் கொண்டோம். அவர்களிடமிருந்து நாங்கள் எடுத்துக் கொண்டபோது அந்த 'ட்ரான்சிட் பீரியடில்' அவர்கள் செய்த முறைகேடுதான் இப்போது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது. இதை நாம் எடுத்து கொண்டதால் அவர்கள் இத்தகைய தவறு செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டோம். அதற்கு முன்னாலே இதைப் போல எவ்வளவு தவறுகள் செய்திருப்பார்கள் என்பதை இப்போது நம்மால் யூகித்துக் கொள்ள முடிகிறது. ஆகவே,

1980 ஜூலை 7] [திரு. செ. அரங்கநாயகம்]

அரசு மேற்கொண்ட முடிவு, தமிழ்நாடு பாட நூல் நிறுவனமே அந்தப் பொறுப்பை ஏற்று, நோட்டுப் புத்தகங்களை தயாரித்து வெளியிட வேண்டுமென்ற முடிவு எவ்வளவு சிறந்தது என்று இப்போது தெரிந்து கொள்ளலாம்.

ஆகவே இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றிருக்கின்ற நிலைமைகள் அரசின் கவனத்திற்கு வந்த காரணத்தினாலேதான் அந்தப் பணியினை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் கீழ் பொறுப்பேற்றுள்ள சிறு தொழில் அதிபர்களிடத்திலே தந்து அதை முறைப்படுத்தி அந்த நோட்டுப் புத்தகங்களை தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனமே வாங்கி பின்னர் விநியோகிக்கின்ற முறை இப்போது இருந்து வருகின்றது. அதிலேயும் சில தவறுகள் வருவது பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட தவறுகளைப் போக்கு வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப் பட்ட நிலைமைகள் குறித்து நாங்கள் அதிகாரிகள் மூலமாக பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தவறுகள் இப்போது அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இதே நேரத்தில், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்பு பல மடங்கு தவறுகள் நடந் திருக்க வேண்டும் என்பதை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இது குறித்து சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. தகவல் கோரல்.

அ. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்வது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, விதி 54-ன் கீழ் பல கவன ஈர்ப்புத் தீர்மானங்களை இந்த அவையிலே தந்திருக்கிறோம். அதற்கு அனுமதி அளிக்கப் பட்டு 15 நாட்களுக்கு மேலாகிறது. ஆனால், இதுவரையில் அவைகளுக்கான எந்தவிதமான விடையும் எங்களுக்குத் தரப்பட வில்லை. தாங்கள், கவனஈர்ப்புத் தீர்மானங்கள் உடனுக்கு டன் எடுத்துக் கொள்ளப்பட்டுவிடையளிக்கப்படும் என்று தெரி வித்